KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 09.08.2011

| Date of the Council Meeting | Decision Number | Subject of the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 09.08.2011 | 67 | **பொருள் எண்: 1**<br>காயல்பட்டணம் நகராட்சியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து விநியோகிக்கப்படும் பிரதான குழாய்கள் மற்றும் விநியோகக் குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்ய ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அங்கீகரித்துள்ளது |
| | 68 | **பொருள் எண்: 2**<br>காயல்பட்டணம் நகராட்சியில் தீவுத் தெருவில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகிக்கும் பிரதான குழாய்களில் நீர்க் கசிவு ஏற்பட்டுள்ளதை சரி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.3500/- க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்கியுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | 69 | **பொருள் எண்: 3**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2011-12-ல் திருச்செந்தூர் மெயின் ரோட்டியில் தாயிம் பள்ளி அருகில் பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்களால் ரூ.2.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி கடிதம் (ந.க.எண்:-அ2/2346/2011-12 நாள்:-13.07.2011) மன்றத்தின் பார்வைக்கு.<br>**அலுவலக குறிப்பு-**<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | அங்கீகரித்துள்ளது |
| | 70 | **பொருள் எண்:- 4**<br>காயல்பட்டணம் நகராட்சியில் தொழில் நுட்ப உதவியாளராக தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வரும் திரு.K.செந்தில்குமார் என்பவருக்கு அரசு பொதுப்பணித்துறை விலை விகிதப்பட்டியல் 2010-11-ல் உள்ள விலை விகிதத்தில் (ரூ.224.00/நாள் ஒன்றுக்கு) ஜூன் 2011, ஜூலை - 2011 மற்றும் ஆகஸ்ட் 2011 ஆகிய மூன்று மாதங்களுக்கு (89 நாட்களுக்கு) மதிப்பீடு ரூ. 20000.00-க்கு நகர்மன்ற தீர்மான எண்:-52 நாள்:-30.06.2011--ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்பொழுது அரசு வெளியிட்டுள்ள பொதுப்பணித்துறை விலை விகிதப்பட்டியல் 2011-12-ல் தொழில்நுட்ப உதவியாளர் நிலை II-க்கு ஒரு நாளைக்கு ரூ.280/-க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சம்பளம் வழங்கப்பட்ட ஜூன் மாதம் 29 நாட்கள்(ரூ.6496/-) கழித்து மீதமுள்ள 60 நாட்களுக்கு (ஜூலை மற்றும் ஆகஸ்ட் 11) ஒரு நாளைக்கு ரூ.280.00 வீதம் ரூ.16800.00 ஆகும். ஆகையால் கூடுதலாகும் தொகை ரூ.3296/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 01.09.2011 முதல் 30.11.2011 வரை திரு.K.செந்தில்குமார் என்பவரை பணியமர்த்திக் கொள்ள (89 நாட்களுக்கு) நகராட்சி பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.25000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்றம் அனுமதி வழங்கியுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 71 | **பொருள் எண்:- 5**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சிப் பகுதிகளில் உள்ள மின்விளக்குகள் மற்றும் உயர்கோபுர மின்விளக்குகளை பராமரிக்க 2011-12-ம் ஆண்டிற்கு (31.03.2012 வரை) தேவயையான மின்உதிரிபாகங்கள் வாங்குவதற்கு நகராட்சி பணிமேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர் (பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | அங்கீகரிக்கப்பட்டுள்ளது |
| | 72 | **பொருள் எண்:6**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவிற்கு 2011-12-ம் ஆண்டிற்கு (31.03.2012 முடிய) தேவையான தளவாடச் சாமான்கள் வாங்க வேண்டும் என்ற சுகாதார ஆய்வாளர்(பொ) அவர்களின் கடிதத்தின்படி பொது சுகாதார பிரிவிற்குத் தேவையான தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.0.50 இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்றம் அனுமதி வழங்கியுள்ளது |
| | 73 | **பொருள் எண்:7**<br>காயல்பட்டணம் நகராட்சியில் குடிநீர் பிரிவிற்கு 2011-2012 (31.03.2012 முடிய) ஆண்டிற்குத் தேவையான பிளிச்சிங் பவுடர் வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.0.40 இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்றம் அனுமதி வழங்கியுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 74 | **பொருள் எண்:8**<br>காயல்பட்டணம் நகராட்சியில் கட்டிட வரைபடம் வரைவாளராக உரிமம் கேட்டு வரப்பெற்ற A.L.ரஹ்மத்துல்லாஹ், 60/93 பெரிய நெசவுத் தெரு, உடன்குடி என்பவரின் மனு மன்றத்தின் பார்வைக்கு.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம். | மன்றம் அங்கீகரித்துள்ளது |
| | 75 | **பொருள் எண்:9**<br>காயல்பட்டணம் நகராட்சியில் வண்ணாக்குடி கடை தெருவில் நகராட்சி வாறுகால் பகுதியில் கட்டப்பட்டுள்ள சிறுபாலம் 2 எண்ணம் பழுதடைந்துள்ளது அதனால் மழைக் காலங்களில் மழைநீர் செல்லும் வடிகால் பகுதியில் அடைப்பு ஏற்பட்டு மழைநீர் விரைந்து செல்வதில் பிரச்சினை ஏற்படுகிறது. எனவே அந்த இரண்டு இடங்களில் உள்ள பழுதடைந்த சிறுபாலங்களை அகற்றி விட்டு புதியதாக சிறுபாலம் அமைக்க நகராட்சி பொறியாளர் மற்றும் பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>தலைவர் மற்றும் உறுப்பினர் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி செய்திட மன்றம் தீர்மானிக்கலாம். | தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இடம் பார்வைஇட்டு அங்கீகரிக்கப்படும் |

76

**பொருள் எண்:10**

காயல்பட்டணம் நகராட்சியில் கீழ்க்கண்ட இடங்களில் உள்ள சாலைகளை மேம்பாடு செய்யவும் அமைக்கவும் நகராட்சி பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | நீளம் (கீ.மீ) | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | அருணாசலபுரம் மேலத் தெரு தார்சாலை அமைத்தல் | 0.060 | 1.20 |
| 2. | மாட்டுக்குளம் முதல் தெரு தார்சாலை மேம்பாடு செய்தல் | 0.118 | 1.35 |
| 3. | மாட்டுக்குளம் இரண்டாலது தெரு தார்சாலை மேம்பாடு செய்தல் | 0.118 | 1.35 |
| 4. | முனியசாமி கோவில் தெரு தார்ச்சாலை அமைத்தல் | 0.223 | 3.80 |
| 5. | பாக்கர் காலணிசாலை தார்ச்சாலை அமைத்தல் | 0.125 | 1.70 |
| 6. | எல்.எப்.ரோடு ஜெய்லானி நகர்சாலை தார்சாலை அமைத்தல் | 0.410 | 6.70 |
| 7. | அருசியாபள்ளி முதல் காட்டுத் தைக்கா தெரு சாலை வரை தார்சாலை அமைத்தல் | 0.070 | 1.20 |

**அலுவலக குறிப்பு:-**

தலைவர் மற்றும் உறுப்பினர் இடம்பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி செய்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றம் அனுமதி வழங்கியுள்ளது

| | | | |
|---|---|---|---|
| | 77 | **பொருள் எண்:11**<br>காயல்பட்டணம் நகராட்சியில் புதுப்பள்ளி பகுதியில் மழைக்காலங்களில் மிக அதிக அளவு தண்ணீர் தேங்கி விடுகிறது தேங்கும் புதுப்பள்ளிவாசலின் உள்ளேயும் தண்ணீர் புகும் நிலை உள்ளது எனவே பொதுமக்களை மழை நீர் பாதிக்கா வண்ணம் மழை நீரை வெளியேற்ற வாறுகால் அமைக்க நகராட்சி பணிமேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்ளால் 140 மீட்டர் நீளத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்கியுள்ளது |
| | 78 | **பொருள் எண்:12**<br>காயல்பட்டணம் நகராட்சியில் அலுவலக ஈப்பு வாகனம் எண்:-TN69 U9148-க்கு பழுது பார்த்து சரி செய்த வகையில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த அரசு அங்கீகாரம் பெற்ற M/S, ஆர்.என்.ஆர். மெக்கானிக்கல் ஒர்க்ஸ், தூத்துக்குடி என்ற நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.4985/- வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>(1) அனுமதி வழங்கலாம்.<br>(2) பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | 79 | **பொருள் எண்:13**<br>நகராட்சி வளர்ச்சி திட்டப் பணிகளின் விபரத்தினை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு பிரிவு அலுவலகம் மூலமாக தமிழ் முரசு உள்ளாட்சி துறை 4-ம் ஆண்டு சாதனை மலர் 2010-ல் வெளியிட்டமைக்காக விளம்பரக்கட்டண தொகையாக ரூ.7000/- மட்டும் KAL பப்ளிகேசன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | அங்கீகரிக்கப்பட்டுள்ளது |
| | 80 | **பொருள் எண்:14**<br>காயல்பட்டணம் நகராட்சி 18-வது வார்டு சேதுராஜா தெரு மயான சாலை மேம்பாடு செய்யவும், அதிலுள்ள கிணற்றினை சீர் செய்து அதற்கு மோட்டார் அல்லாது நீர் இறைக்க ஏதுவாக வாளி அமைக்கவும் மற்றும் வடக்கு கோமான் புதூர், முத்தாரம்மன் கோவில் வடக்கு பகுதி ஆகியவற்றிற்கு தலா 150 மீட்டர் நீளத்திற்கு குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்யவும் கேட்டுக் கொண்ட 18-வது வார்டு உறுப்பினர் திரு.எஸ்.காசிராஜன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>தலைவர் மற்றும் உறுப்பினர் இடம்பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி செய்திட மன்றம் தீர்மானிக்கலாம். | மன்றம் அனுமதி வழங்கி உள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | 81 | **பொருள் எண்:15**<br>காயல்பட்டணம் நகராட்சி தண்ணீர் டேங் வாகனம் **HMT** டிராக்டர் பழுது சரி செய்த வகையில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த அரசு அங்கீகாரம் பெற்ற M/S, ஆர்.என்.ஆர். மெக்கானிக்கல் ஒர்க்ஸ், தூத்துக்குடி என்ற நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.49850/- வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:-**<br>(1) அனுமதி வழங்கலாம்.<br>(2) குடிநீரின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். | மன்றம் அனுமதி வழங்கி உள்ளது |